Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 223/2024** |
| Deposition of witness for | :: | **PW. 4** |
| Name | :: | **ராஜசேகரன்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**
**11.06.2026**
**முதல் விசாரணை**:

1. நான் அருப்புக்கோட்டை பாளையம்பட்டி தீர்த்தக்கரையில் குடியிருந்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி ஆவணங்களில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். கடந்த ஒன்றரை வருடத்திற்கு முன்பு அருப்புக்கோட்டை ரயில் நிலையம் அருகே நான் சென்று கொண்டிருந்தபோது எனக்கு பழக்கமான போலீசார் ஒருவர் கேட்டு கொண்டதற்கு இணங்க மேற்படி இரண்டு கையெழுத்துக்களையும் செய்து கொடுத்தேன். ஆஜர் எதிரியை தெரியும், அவர் எனது ஊர்க்காரரர் ஆவார். என்முன்பாக எதிரி எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை. என்முன்பாக எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**( ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து அசாஆ.5 ஆகவும், அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து அசாஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என**

**அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. கடந்த 08.10.2024 ம் தேதி மதியம் 02.15 மணியளவில் நானும் எனக்கு தெரிந்த அழகுசுந்தரம் என்பவரும் அருப்புக்கோட்டை ரயில்வே நிலையம் அருகே இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது அருப்புக்கோட்டை நகர் போலீசார் எங்களை அழைத்து குற்ற எண். 302/2024 திருட்டு வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட ஸ்டீபன் என்பவர் எங்கள் முன்னிலையில் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அதில் நானும், அழகுசுந்தரமும் சாட்சி கையெழுத்து செய்ததாகவும், அதனை மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினம் மதியம் 03.00 மணிக்கு TN 67 CY 0891 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை அத்தாட்சியில் கைப்பற்றிய போது நானும் அழகுசுந்தரமும் சாட்சியாக இருந்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**